162962

தமிழ்த் திருமணமுறை

Y73(P31):3427
N56
162962



# தமிழ்த் திருமண முறை

(பேராசிரியர் மயிலை சிவமுத்து)



Y73(831):3427
162962

# தமிழ்த் திருமண முறை

108

பேராசிரியர்

மயிலை சிவ. முத்து அவர்கள்

மாணவர் மன்ற வெளியீடு

17, இரத்தின முதலி தெரு, சென்னை-1,

1956

முதல் பதிப்பு, 1956.

162962

Y73(P31):3427
N56

உரிமை உடையது ] [ விலை 4 அணா.

# வெளியீட்டின் நோக்கம்

⊕

தற்போது தமிழ்நாடு பல துறைகளில் மறுமலர்ச்சி அடைந்து வருகிறது. பற்பல துறைகளில் சீர்திருத்தம் முகிழ்த்து வருகிறது. அறிவிலே புரட்சி, வாழ்க்கையிலே புரட்சி, பழக்க வழக்கங்களிலே புரட்சி, மனநிலையிலே புரட்சி ஏற்பட்டு வருகிறது. இந்நிலை மேன்மேல் வளரவேண்டும். இத்தகைய புரட்சிகளில் ஒன்றுதான் இன்று நடைபெறும் தமிழ்த் திருமணம்.

## சிவ முத்தும் தமிழர் திருமணமும்!

இத் திருமணம் தமிழ் நாட்டிற்குப் புதுவதன்று. பழந்தமிழர் மேற்கொண்டு வாழ்ந்த மணமுறையில் மக்கள் மனநிலைக்கு ஏற்பச் சிற்சில மாறுதல்களை அமைத்து அறிவுடைப் பெருமக்கள் பலர்கூடி ஆய்ந்தமைத்ததாகும். இம்முறையில் எண்ணற்ற தமிழ்த் திருமணங்களைச் செய்துவைத்துத் தமிழ் உணர்வு பரப்பி வருபவர் நம் பெரும் புலவர் மயிலை. சிவ முத்து அவர்கள். இந்நெறி வளர அவர் ஆற்றிவரும் அரும்பெருந் தியாகங்கள் அளவிலடங்காதன.

## ஏன் சீர்திருத்தம் வேண்டும்?

மணம் என்பதற்குக் 'கூடுதல்' என்பது பொருள். அன்பால் பிணைக்கப்பட்ட இருவர் உள்

ளங்கள் ஒன்று கூடுவதையே மணம் என்று கொண்டோம். பண்டைக்காலத்தில் வாழ்ந்த தமிழ் மகனும் தமிழ் மகளும் ஒருவரை ஒருவர் நேரிற்கண்டு பழகி மன ஒற்றுமை உடையவரான பின்பே அவர்தம் பெற்றோர்கள் அவர்க்குத் திருமணம் செய்து வைப்பது வழக்கம். அத்திருமணமும் மிகச் சுருங்கிய முறையில் சிக்கனமாகவே நடைபெறும். அன்பினால் பிணைக்கப்பட்ட மணமக்கள் இருவரும் இல்லறமென்னும் நல்லறம் ஏற்று வாழ்க்கை துவங்குகிறார்கள் என்பதை அறிவிக்கவே மணச் சடங்குகள் நடைபெற்றன. அவை அறிவுக்கு ஏற்றனவாய் மங்கலமாய் அமைந்திருந்தன. புதல்வர்ப் பயந்த முதுபெரு மகளிர் பலர்கூடிப் புதுநீரில் நெல்லும் மலரும் இட்டு அந்நன்னீரால் மணமகளை மங்கல நீராட்டுவர்; முற்றம் முழுதும் பந்தல் இட்டுப் புது மணல் பரப்பிக் கமுகும், வாழையும், இஞ்சியும் மஞ்சளும் கட்டி அழகு செய்வர்; சுற்றமும் நண்பும் சூழ விருந்துண்டு களிப்பர். இவ்வாறு மங்கல முறையில் கொண்டாடப்பட்ட மணவிழா நாளடைவில் எண்ணற்ற சடங்குகளை உடையதாய், அறிவுக்குப் பொருந்தாத பல பழக்க வழக்கங்களை யுடையதாய் இவை எல்லாவற்றுக்கும் மேலாக நமக்குப் புரியாத மொழியில் மந்திரங்களை மொழிவதாய்த் தமிழர் நாகரிகத்திற்குப் புறம்பான முறையில் மாறிவிட்டது. இத்தகைய மணமுறையால் நாம் இழிவு செய்யப்பட்டோம்; நம்மொழி, நாகரிகம், பழக்கவழக்கங்கள் மங்கத் தொடங்கின. அத்தகைய நிலைமையை மாற்றித் தமிழ்ப் பண்பாட்டுக்கேற்ற வகையில், அறிவுக்

கொத்த முறையில், ஆடம்பரமற்ற தன்மையில் திருமணங்கள் நிகழவேண்டும் என்ற உயரிய கொள்கையாலேயே இத்தகைய தமிழ்த் திருமண முறைகள் வகுக்கப்பட்டன.

சான்றோர்கள் வகுத்த அம்முறைகளைப் பின்பற்றிப் பேராசிரியர் மயிலை. சிவ. முத்து அவர்கள் ஆயிரக்கணக்கான திருமணங்களை நடத்தி நல்வழி காட்டியுள்ளார். அம்முறைகளை அனைவரும் அறிந்து பிறர் உதவியின்றித் தாங்களே திருமணங்களை நடத்தத் துணையாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்நூலை வெளியிட விரும்பினேம், எங்கள் வேண்டுகோளுக்கிணங்கித் தம் அநுபவத்தின் சாரமாக இந்நூலை வடித்துத் தந்த பேராசிரியர் அவர்கட்கு எங்கள் உளமார்ந்த வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்து உங்கள் முன் இந்நூலைப் படைக்கின்றோம்.

இங்ஙனம்,

சென்னை மாணவர் மன்றத்தினர்.

# புதுமுறைத் திருமணம்

(ஆசிரியர் மணி திருநாவுக்கரசு முதலியார்)

அறிஞர்களே, இப்போது நடைபெற்று வரும் திருமணச் சடங்குகள் பல பொருளற்றவை; சில மக்களின் அநாகரிக காலத்துக்கு ஏற்றவை; சில குலவேற்றுமையும் உயர்வு தாழ்வும் உடையவை; மிகச் சிலவே பொருளுடையவை. இவை இக்காலத்துக்கு இசைந்தவை அல்ல; ஆதலின் கல்வி கற்றவர் எக்குலத்தாராயினும் ஆசிரியராகவும், மருந்து நலம் தெரிந்தவர் எக்குலத்தாராயினும் மருத்துவராகவும் ஆதல்போல மணமுறை தெரிந்தவர் யாவராயினும் எந்த மணத்திற்கும் ஆசிரியராக இருக்கலாம். சாதிபேதம், மதபேதம் வேண்டா; எல்லா மதத்துக்கும் இசைந்த பொதுவான பெயர்களையும் பாடல்களையுமே எடுத்தாள வேண்டும். மணவினையின் உயர்வும் மணமகன் மணமகள் கடமைகளையும் அவர்கட்கு எடுத்துக்காட்டல் வேண்டும். இப்போது சொல்லப்பட்டு வரும் சிறந்த மந்திரங்களுக்கும் பொருள் இவற்றைக் காட்டினும் வேறொன்றும் இல்லை.

சிலர் பழமை பாராட்டலாம். பழமையைப் பற்றிச் சிறிது இவர் நினைந்து பார்க்கின் அமைந்துவிடுவர் என்பது ஒருதலை. உலகத்திலே என்றும் ஒழுக்கம் மாறிக்கொண்டே வரும். நமது நாட்டிலும் ஆயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்த ஒரு ஒழுக்கம் ஐந்நூறு ஆண்டுகட்குப் பின் இருந்தது இல்லை.

அக்காலத்து ஒழுக்கம் அதற்குப் பின் நூற்றாண்டில் மாறுபட்டுவிடும். இவ்வுண்மையைப் பார்த்தால் பழமைஎன்பது ஒன்றில்லையென யாவர்க்கும் இனிது விளங்கும். சடங்குகளைக் கண்டு சிலர் மயங்குகின்றனர். அஃது அவர்கள் அறியாமை மயக்கமே ஆகும். பலர் கூடி ஒருவரை ஒருவர் வைதுகொள்வதைக் காட்சியாகப் பார்க்கின்றவர்களும் உளர்; மகிழ்கின்றவர்களும் உளர். இது மக்களின் தாழ்ந்த குணம் ஆகும். தாழ்ந்த நிலையிலும் சிறிது இன்பம் உண்டு. இது பற்றி அதனை உயர்ந்தது எனக் கொள்ளல் ஆகாது. எவ்வாறாயினும் பொருளுணர்ந்து மேற்கொள்ளும் செய்கைகளே என்றும் பயன்படுபவை என்பதை வலியுறுத்துகின்றேன். அன்பர்கள் யாவரும் இவ்வுண்மையை மேற்கொள்ளப் பெரிதும் வேண்டுகின்றேன்.

பேராசிரியர் மயிலை. சிவமுத்து அவர்கள் நிகழ்த்தும்

# தமிழ்த் திருமண முறை

தமிழ் முறையிலே திருமணம் நடத்த வேண்டும் என்று அன்பர்கள் வரின் திருமணம் நடத்திவைப் போர் அவர்களைக் கீழ்வரும் கேள்விகளைக் கேட்டுத் தமக்குள்ள ஐயங்களைத் தீர்த்துக்கொள்ளுதல் நலம்.

1. தமிழ்த் திருமணம் யாருக்கு நிகழ்த்தல் வேண்டும்? 2. திருமணம் நடத்திக்கொள்ளும் அன்பருக்கு இந்த முறை உடன்பாடுதானா? 3. இந்தத் திருமணத்தில் பெண்வீட்டார் பிள்ளை வீட்டார் ஆகிய இருதிறத்தாரும் தம் முழுமனதுடன் பங்கு கொள்ள விரும்புகின்றனரா? 4. மணம் செய்து கொள்ளும் தம்பதிகள் பொருத்தமான வயதுடையவர்கள்தாமா? 5. மணமகனுக்கோ, மணமகளுக்கோ இத்திருமணத்தில் மறுக்கக் கூடிய செய்திகள் எவையேனும் உண்டா?

இவ்விதமெல்லாம் கேட்டு அரசியலார் சட்ட முறைக்கு எல்லா வகையிலும் பொருத்தமுடையவர்களாக இருந்தால்தான் நாம் திருமணம் செய்து வைக்க முற்படுதல் வேண்டும். இங்ஙனம் ஆராய்ந்து பாராமையால் திருமணம் செய்துவைப்போர் பலர் இடர்ப்பாடடைகின்றனர். இத்தமிழ்த் திருமண முறையைக் குறித்துத் தவறான எண்ணம் கொண்

டிருப்பின் அவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் இத் திருமணத்தின் நோக்கத்தை விளக்கிச் சொல்லிப் பிறகு உடன்படவைத்தலே நல்லது.

தமிழ்த் திருமணம் கடவுட் கொள்கையோடு கூடியது. ஒரு சமயத்தையோ ஒரு குலத்தையோ ஒரு கட்சியையோ வெறுக்கும் நோக்கத்துடன் தோன்றியது அன்று. மணம் செய்துகொள்ளுவோர் பிற்கால வாழ்க்கையிலே தம்முடைய கடமையை உணர்ந்து நல்வழியிலே நடத்தல் வேண்டும் என்பதே இத்திருமணத்தின் முதல் நோக்கம். ஆதலால் திருமணத்தில் செய்யும் சடங்குகளின் பொருளைச் செய்விப்போரும் செய்துகொள்வோரும் உடனிருப்போரும் புரிந்து கொள்ளத்தக்க முறையிலே இந்தத் தமிழ்த் திருமணம் அமைக்கப் பெற்றுள்ளது. எனவே இத்திருமணத்தை நடத்திவைப்போர் அங்குக் குழுமியுள்ள மக்களுக்கும் மணம் செய்துகொள்ளும் தம்பதிகட்கும் அவ்வப்போது விளக்கிக் கூறுதல்வேண்டும். அங்ஙனம் கூறத்தக்கவைகளுள் கீழ்வருபவை இன்றியமையாதனவாகும்.

1. பெண்வீட்டார் பிள்ளை வீட்டார் அழைப்பிதழ்களைத் திருமண மன்றத்தில் கூடியுள்ள பெரியோர்களுக்குப் படித்துக் காட்டுதல்.

2. அழைப்பிதழ் அனுப்பியோர், வரவேற்பினர், மணமக்களின் பெற்றோர் முதலியவர்களின் பெயர்களைப் படித்துக் காட்டிக் கூடுமானால் அவர்களையும் அறிமுகப்படுத்துதல் நலம்.

3. மணமகன், மணமகள் ஆகிய இருவரையும் ஆங்குக் குழுமியுள்ளவருக்கு அறிமுகப் படுத்துதல்.

4. மணமக்களின் எண்ணம் அறிந்து கொள்ளும் வகையில் இந்தத் தமிழ்த் திருமணத்தைக் குறித்தும் திருமணம் செய்துகொள்ள வேண்டிய கடமையைக் குறித்தும் மணமக்களுக்குச் சுருக்கமாக விளக்கிக் கூறுதல்.

திருமணம் செய்துகொள்வோர்க்கு அவரவர் பழக்க வழக்கங்களுக்கு ஏற்றவகையிலும் அவர்கள் நிலை, அவர்தம் குடும்பநிலை, காலநிலை முதலியவைகட்கு ஏற்ற வகையிலும் அந்தத் திருமணத்தை நடத்துதல் நலம்.

சிலர், "பழைய பழக்க வழக்கங்களுள் ஒன்றையும் மாற்றுதலாகாது; செய்யும் செயல்கள் மட்டும் தமிழில் இருந்தால் போதும்" என்று தெரிவிப்பர்; வேறு சிலர், ஒரு சில சடங்குகளை மட்டும் ஏற்றுக் கொள்வர்; மற்றும் சிலர், எந்தச் சடங்குகளும் வேண்டாமென்பர். திருமணம் நடத்துவோர் அவரவர் நிலைமைக்கு ஏற்ப நடத்த முயலுதலே நலம். நல்ல கருத்துக்களைக் கொண்டிராத சடங்குகள் இருப்பின், அவை நம் நாட்டுக்கும் கால நிலைமைக்கும் பொருந்தாமல் இருத்தலை விளக்கிக் காட்டுதல் வேண்டும். பரதேசம் செல்லுதல், அம்மி மிதித்தல் முதலியவைகளில் உள்ள பொருந்தாத கருத்துக்களைத் திருமண ஆசிரியர், அங்குள்ளோருக்கு எடுத்துக் காட்டி விளக்குதல் வேண்டும். பிறர் உள்ளம் புண்படாதவகையில் திருமணம் நடத்திவைப்போரும் உடனிருந்து வாழ்த்துரை வழங்குவோரும் சொற்பொழிவாற்றுதல் இத்தமிழ்த் திருமணத்தின் முக்கியமான நோக்கமாக இருத்தல் வேண்டும்.

## திருமணம் நிகழ்த்தும் முறை :

அவரவர் பழக்க வழக்கங்களுக்கு ஏற்ப, மணப் பந்தலை மலர் மாலைகளாலும் பல்வேறு விளக்குகளை யும் அழகுபடுத்துமாறு செய்தல் வேண்டும். குத்து விளக்கு, குடவிளக்கு, கிளைவிளக்கு, கைவிளக்கு முதலியவைகளுள் அவரவர்கட்கு இயைந்த வகையில் ஏற்றிவைப்பதில் குற்றம் சிறிதும் இல்லை. சிலர் வர்ணம் தீட்டிய மட்கலயங்கள், மர உரல் முதலியவை களை மணப் பந்தலில் வைப்பினும் ஆசிரியர் அவை களை ஏற்றுக்கொள்ளலாம். சட்டத்துக்கு மாறு படாத வகையில் குறைந்தது இரண்டு குத்துவிளக் குகளேனும் இருத்தல் நலம்.

மணப் பந்தலில் மணமக்கள் கிழக்கு நோக்கியும் மணம் செய்து வைக்கும் ஆசிரியர் வடக்கு நோக்கி யும் அமர்ந்திருத்தல் நம் நாட்டு வழக்கமாக இருத்த லின் இதனையே அனைவரும் கடைப்பிடிக்கலாம்.

ஒரு தலைவாழையிலையை மணமக்களுக்கு முன்புறமாக (அதாவது கிழக்குத் திசை) வைத்து அவ்வாழை இலையில் மூன்று பிடி பச்சரிசி பரப்பிவைத்து அதன்மீது வாழைப்பூ வடி வமைந்த ஒரு செம்பினை மஞ்சள் குங்குமங்களால் அலங்கரித்துவைத்து அச்செம்பில் தூய்மையான நீர் வார்த்து மாவிலைக் கொத்தினைப் பொருத்தி அதன் மீது முற்றிய தேங்காய் ஒன்றினை மஞ்சள் குங்குமங் களால் அலங்கரித்து வைத்தல் வேண்டும். அச் செம்பினுக்குப் பக்கத்தில் அரைத்த மஞ்சளைப் பிடித்துவைத்து அதைக் குங்குமத்தால் அலங்கரித்

தல் வேண்டும். கலசத்துக்கு மற்றொரு பக்கத்திலே ஒரு தட்டில் மஞ்சள் கலந்த பச்சரிசியைப் பரப்பி அதன்மீது முற்றிய தேங்காய் ஒன்றினை வைத்து அதனையும் மஞ்சள் குங்குமங்களால் அலங்கரித்துப் பொற்றாலியோடு கூடிய கயிற்றை அதில் சுற்றிவைத்தல் வேண்டும். மணமக்களுக்கு முன்னர் இரண்டு முக்காலிகள் இட்டு மணமகனுக்காகவும் மணமகளுக்காகவும் பெற்றோர்கள் பரிசாகத் தரும் புத்தாடைகளும் மலர் மாலைகளும் நிரம்பிய தட்டினை முக்காலியொன்றின்மீது வைத்தல் வேண்டும்.

கடவுள் வணக்கம் முடிந்த பின்னர் மணப் பந்தலில் குழுமியுள்ள அன்பர்களிடம் அப் புத்தாடைகளை வாழ்த்தித் தருமாறு கேட்டு அவர்கள் வாழ்த்தினைப் பெற்று மணமக்கட்கு அப்புத்தாடைகளை அளித்தல் வேண்டும்.

புத்தாடையுடன் மணமகனும் மணமகளும் மணப்பந்தலுக்கு வந்ததும் அவரவர் மரபுக்குத் தக்கபடி இல்லுறை தெய்வ வழிபாட்டினை முடித்துக் கொண்டு மணமக்கள் மணமேடை வந்து அமர வேண்டும்.

மணமகன் மணமகளுக்கு மங்கலநாண் அணியும் வரையில் மணமகள் மணமகனுக்கு வலப்பக்கத்தில் இருத்தல் மரபு. இம்மங்கல நிகழ்ச்சிமுடிந்ததும் மணமகள் மணமகனுக்கு இடப்பக்கத்தில் அமரும்படி செய்யலாம்.

1. மஞ்சளால் பிடித்துவைக்கப்பட்டுள்ளதை அருவமென்றும் உருவமென்றும் சொல்ல இயலாத தந்தமிழ்க் கடவுள் வடிவமென்றும், 2. நீர் நிரம்பிய

செம்பின்மேல் தேங்காயோடுவிளங்கும் வடிவத்தினை இறைவன் அம்மை அப்பனாக இருக்கும் வடிவு என்றும், 3. குடவிளக்கு, கிளைவிளக்கு முதலியவைகள் இறைவன் ஒளிவடிவமாக விளங்கும் நிலையினைக் குறிப்பன என்றும் மறைமலையடிகளார் தெரிவித்துள்ள கருத்தின்படி மணமக்கள் இம்மூன்று வகையாலும் இறைவனை வணங்குவர்.

சமித்துகள் கொண்டு புரியும் எரியோம்புதலும் இவ்வழிபாடுகளுள் தலைசிறந்த ஒன்றாக விளங்குதல் வேண்டும்.

புத்தாடை அணிந்துவந்த மணமக்கள் முதலில் பெற்றோர் வழிபாடு புரிந்து அவர்தம் நல்லாசி பெற்று எரியோம்பும் செயலால் ஒளி வடிவில் கடவுளை வணங்குவர். இக்கால அரசாங்கச் சட்டத்திற்கும் இச்சடங்கு மிக இன்றியமையாததாக இருக்கின்றது. எரியோம்புதலால் கடவுளை வழிபடும்போது தேவார திருவாசகங்கள், திருவாய்மொழி, தமிழ் மறையாகிய திருக்குறள் இவைகளுள் அவரவர் விழைவுக்கு ஏற்ற வண்ணம் தகுதி வாய்ந்த பாடல்களை ஆசிரியர் உளங்கனிந்து ஓதுதல் வேண்டும். (அங்ஙனம் பாடுதற்குரிய பாடல்கள் இந்நூலின் பிற்சேர்க்கையில் தரப்பட்டுள்ளன.) இவ் வழிபாடு முடிந்ததும் அங்குள்ள பெரியோர்களால் வாழ்த்தித் தரப்பெற்ற பொற்றாலியினை மணமகன் மணமகளுக்கு அணிதல் வேண்டும். அப்போது இன்னிசை முழக்கமும் "மணமக்கள் வாழ்க! மணமக்கள் வாழ்க" என அன்பர்களின் வாழ்த்தலும் மஞ்சள் கலந்த அரிசியும் மலரும் தூவுதலும் நிகழும்.

பின்னர் மணமக்கள் மாலை மாற்றிக் கொள்ளுவர். ஒருவருக்கொருவர் தம் மாலைகளை மூன்று முறை மாற்றிக் கொள்வதால் மணமக்களின் மன ஒருமைப் பாட்டினை மக்கள் அறிந்து கொள்ளுகின்றனர். மாலை மாற்றுதல் முடிந்தபின்னர் மணமகன் தன் வாழ்க்கைத் துணைவியின் திருக்கரத்தைப் பிடித்துக் கொண்டு மணப் பந்தரைச் சுற்றி வருதல் வேண்டும். மாலை மாற்றுதலும் மணமகளைக் கைப்பிடித்து வலம் வருதலும் அரசாங்கச் சட்டத்துக்கு இன்றியமையாததாக இருப்பதோடு மணமக்களின் உடன்பாட்டினை அங்குள்ளோர் அறிந்து கொள்ளுதற்கும் சிறந்த சான்றாக விளங்குகின்றன. இச்செயல்களோடு திருமணம் முடிவு பெறுகின்றது. இதனைத் தொடர்ந்து திருமண ஆசிரியரும் பிறரும் மணமக்கள் வாழ வேண்டிய வழிவகைகளைத் திருக்குறள், அகநானூறு, போன்ற சிறந்த நூல்களைக் கொண்டும் பிற பெரியார்களின் வாழ்க்கை வரலாறுகளைச் சான்றாக எடுத்துக் காட்டியும் வாழ்த்துவர்.

## குறிப்பு

காப்புக் கட்டுதலும் களைதலும்.

தமிழ்த் திருமணம் மிகவும் சிக்கன முறையில் ஒரேவேளையில் நிகழுமாறு அமைத்திருப்பதால் காப்புக் கட்டல் காப்புக் களைதல் அரசாணிக்கால் நடுதல் முதலியன வேண்டுவதே இல்லை. இவைகளையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்பவர்களுக்குக் கீழ் வருமாறு செய்தல் வேண்டும்.

ஒரு தட்டிலே மஞ்சள் அரிசியைப் பரப்பி வைத்து அதன்மீது மஞ்சள் குங்குமங்களால் அலங் கரிக்கப்பட்ட தேங்காயை வைத்து அந்தத் தட்டினை மணமகனுக்கு முன்னால் இடப்பட்டிருக்கும் முக்காலி யின் மேல் வைத்தல் வேண்டும். மணமகன் வலக் கையினை அந்தத் தேங்காயின் மீது வைத்தபடி யிருக்க முழுமஞ்சள் கட்டப்பெற்ற நூல், கயிற்றினை மணமகன் கரத்தில் கட்டுதல் வேண்டும். அதன் பின்னர் மணமகள் தன் இடக் கையை அந்தத் தேங்காயின்மேல் வைக்க மணமகன் மஞ்சள் கட் டிய நூலினை மணமகள் கையில் கட்டுதல் வேண்டும். அதே சமயத்தில் அவர்களுக்கு எதிர்ப்புறத்தே நடப்பெற்றுள்ள அரசமரக் கிளைக்கும் மஞ்சள் நூல் கயிறு ஒன்று கட்டுதல் வேண்டும். திருமணம் முடிந்த பின்னர் அதே முறையில் மணமகனை மஞ் சள் பூசிய தேங்காயின்மேல் கையை வைக்கச் செய்து முன்பு கட்டிய மஞ்சள் நூல் கயிற்றினை அவிழ்த்துவிடச் செய்தல் வேண்டும். அதேசமயத் தில் அரசங்கிளையில் கட்டிய மஞ்சள் கயிற்றினையும் அவிழ்த்துவிடுதல் வேண்டும். இவை நிகழும்போது தும்மல் இருமல் முதலியன கேளாமல் இருப்பதற் காகக் கெட்டி மேளம் கொட்டுதல் வழக்கம்.

## பந்தற்கால் நடுதல்

தமிழ்த் திருமணம் செய்துகொள்பவர்களின் பெரும் பாலோர் இந்தச் சடங்கினைச் செய்வ தற்கு ஆசிரியரை வேண்டிக்கொள்வதில்லை. மங்கல

மகளிர் ஐவர் ஒன்று கூடிப் பந்தற்கால்களுள் வடகிழக்கு மூலையில் நட வேண்டிய ஒன்றுக்கு மஞ்சள் பூசி, குங்குமம் இட்டு மலர்சூடி மேளதாள முழக்கத்துடன் தங்கள் கைகளால் அந்தக் கம்பத்தைக் குழியில் நடுவார்கள். அப்போது ஆசிரியர் உடனிருந்தால் அவர் இறை வழிபாடு புரிந்து மஞ்சள் கலந்த அரிசியைப் பரப்பிய தலைவாழையிலையின் மீது கலசம் நிறுத்தி அந்தக் கலசத்திற்கு வழிபாடு புரிந்து அந்தக் கலசத்திலுள்ள நீரினைக் கொண்டு மணப்பந்தற் காலினைக் கழுவும்படி செய்வர். இவைகள் அந்தந்த நாட்டுப் பழக்க வழக்கங்களுக்கு ஏற்பச் சிறிது மாறுபடக்கூடும். ஆதலின் அங்குள்ள பெரியோர்களையும் கலந்துகொண்டு செய்வித்தல் நலம்.

## உறுதி செய்தல்

இது மணம் நிகழ்வதற்கு முன்னர் பெண் வீட்டிலே நிகழும் சடங்கு. பிள்ளைக்கு உரியோரும் பெண்ணுக்கு உரியோரும் ஒரு நல்ல நாளிலே பலர் முன்னிலையிலே ஒருவருக்கொருவர் உறுதி கூறிக் கொள்வர். தாம் தம் பெண்ணைக் குறித்த ஓர் மணமகனுக்குத் தருவதாகவும் அவ்வாறே அம் மணமகன் வீட்டார் மணமகனுக்கு வாழ்க்கைத் துணைவியாகக் குறித்த ஓர் பெண்ணை ஏற்றுக்கொள்வதாகவும் ஒருவருக்கொருவர் எழுத்து மூலமாகவும், வாய்மொழி மூலமாகவும் ஆசிரியர் முன்னிலையிலே சுற்றத்தார் நண்பர் முதலிய குழுவினரைச் சான்றாக்கொண்டு உறுதி செய்து கொள்ளவேண்டும்.

## திருமணம் செய்யத் தேவைப்படும் இன்றியமையாப் பொருள்கள்

1. பூ ஒரு செண்டு
2. வாழைப் பழம் மூன்று
3. அரைத்த மஞ்சள் ஓர் உருண்டை
4. முழு மஞ்சள் மூன்று துண்டுகள்
5. குங்குமம்
6. கற்பூரம்
7. சாம்பிராணி
8. ஊதுவத்தி
9. தலை வாழையிலை மூன்று
10. தேங்காய் மூன்று
11. பச்சரிசி உழக்கு
12. பெரிய தட்டு இரண்டு
13. சிறிய தட்டு ஒன்று
14. மாவிலைக் கொத்து
15. வாழைப் பூ வடிவச் செம்பு
16. பெரிய செம்பு
17. மணை, முக்காலி, விளக்குகள்
18. மணமக்களுக்குப் புத்தாடை
19. பூமாலை
20. பொற்றாலி
21. சமித்து
22. நெய்
23. மோதிரம்

# சைவ சமயத்தவர்
# திருமணத்திற்குப் பொருத்தமான பாடல்கள்

## இறை வழிபாடு

அறுவகைச் சமயத் தோர்க்கும் அவ்வவர் பொருளாய் வேறும்
குறியது உடைத்தாய் வேதா கமங்களின் குறியி றந்தங்(கு)
அறிவினில் அருளால் மன்னி அம்மையோ(டு) அப்ப னாகிச்
செறிவொழி யாது நின்ற சிவனடி சென்னி வைப்பாம். (1)

உலகெலாம் உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம். (2)

## புத்தாடை வழங்கும் போது

பொன்னு மெய்ப்பொரு ளுந்தரு வானைப்
போக மும்திரு வும்புணர்ப் பானைப்,
பின்னை என்பிழை யைப்பொ றுப் பானைப்
பிழையெ லாம்தவி ரப்பணிப் பானை,
இன்ன தன்மையன் என்றறி வொண்ணா
எம்மா னைஎளி வந்த பிரானை,
அன்னம் வைகும் வயல்பழ னத்தணி
ஆரு ரானை மறக்கலு மாமே. (1)

தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினும்
சார்பி னும்தொண்டர் தருகிலா
பொய்ம்மை யாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்,
இம்மை யேதரும் சோறும் கூறையும்
ஏத்த லாம்இடர் கெடலுமாம்,
அம்மை யேசிவ லோக மாள்வதற்கு
யாதும் ஐயுற வில்லையே. (2)

## பெற்ரோர் வழிபாடு

அப்பன்நீ அம்மைநீ ஐயனும்நீ
அன்புடைய மாமனும் மாமியும்நீ,
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும்நீ
ஒருகுலமும் சுற்றமும் ஓருரும்நீ,
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய்நீ
துணையாய்என் நெஞ்சம் துரப்பிப் பாய்நீ,
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத்தும்நீ
இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன் நீயே. (1)

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே,
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே! சிவபெரு மானே!
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ(து) இனியே. (2)

## அழலோம்பல் புரியும்போது

நமச்சிவாய வாஅழ்க! நாதன்தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் [வாழ்க!
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க!
ஆகமம் ஆகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க!
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க!

* * *

ஆடக மதுரை அரசே போற்றி!
கூடல் இலங்கு குருமணி போற்றி!

தென்தில்லை மன்றினுள் ஆடி போற்றி!
இன்றெனக் காரமு(து) ஆனாய் போற்றி!
மூவா நான்மறை முதல்வா போற்றி!
சேவார் வெல்கொடிச் சிவனே போற்றி!
மின்னார் உருவ விகிர்தா போற்றி!
கல்நார் உரித்த கனியே போற்றி!
காவாய் கனகக் குன்றே போற்றி!
ஆவா என்றனக்(கு) அருளாய் போற்றி.

* * *

மானேர் நோக்கி மணாளா போற்றி!
வானகத் தமரர் தாயே போற்றி!
பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி!
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி!
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி!
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி!
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி!

* * *

தென்னா டுடைய சிவனே போற்றி!
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி!

* * *

போற்றி போற்றி புயங்கப் பெருமான்
போற்றி போற்றி புராண காரண
போற்றி போற்றி சயசய போற்றி!

### அழலோம்பல் முடிந்த பின்னர்

இருநிலனாய்த் தீயாகி நீரும் ஆகி
இயமான னாய்எறியும் காற்றும் ஆகி,
அருநிலைய திங்களாய் ஞாயிறாகி
ஆகாச மாய்அட்ட மூர்த்தி ஆகிப்,

பெருநலமும் குற்றமும் பெண்ணும் ஆணும்
பிறருருவும் தம்முருவும் தாமே யாகி
நெருநலையாய் இன்றாகி நாளை யாகி
நிமிர்புன் சடையடிகள் நின்றவாறே.

## மங்கலநாண் அணியும்போது

மண்ணினில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணினல் லகதிக்கு யாதுமோர் குறைவிலை
கண்ணினல் லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை இருந்ததே.
கன்றுடை யானைத் தீயதில் லானை நரைவெள்ளே(று)
ஒன்றுடை யானை உமையொரு பாகம் உடையானை
சென்றடை யாத திருவுடை யானைச் சிராப்பள்ளிக்
குன்றுடை யானைக் கூறவென் உள்ளம் குளிருமே.

## மாலை மாற்றல் நிகழும்போது

குரும்பைமுலை மலர்க்குழலி கொண்ட தவம் கண்டு
குறிப்பினொடுஞ் சென்றவள்தன் குணத்தினைநன் கறிந்து
விரும்புவரம் கொடுத்தவளை வேட்டருளிச் செய்த
விண்ணவர்கோன் கண்ணுதலோன் மேவியவூர் வினவில்
அரும்பருகே சுரும்பருவ அறுபதம்பண் பாட
அணிமயில்கள் நடமாடும் அணிபொழில்சூழ் அயலின்
கரும்பருகே கருங்குவளை கண்வளரும் கழனிக்
கமலங்கள் முகமலரும் கலயநல்லூர் காணே.

## வாழ்த்து

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்(து) உள்ளமும் ஓங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம். (க)

## கண்ணேறு கழித்தல்

ஆனந்த வெள்ளத் தழுந்துமோ ராருயிர் ஈருருக்கொண்(டு)
ஆனந்த வெள்ளத் திடைதிளைத் தாலொக்கும் அம்பலம்சேர்
ஆனந்த வெள்ளத் தறைகழ லோனருள் பெற்றவரின்
ஆனந்த வெள்ளமவற் றாமுற் றாலிவ் வணிநலமே. (2)

## வைணவ சமயத்தவர் திருமணத்திற்குப் பொருத்தமான பாடல்கள்

பச்சைமா மலைபோல் மேனி
பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா! அமரர் ஏறே!
ஆயர்தம் கொழுந்தே! என்னும்
இச்சுவை தவிர யான்போய்
இந்திரலோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகரு ளானே! 1

கங்கையின் புனித மாய
காவிரி நடுவு பாட்டுப்
பொங்குநீர் பரந்து பாயும்
பூம்பொழில் அரங்கந் தன்னுள்
எங்கள்மால் இறைவன் ஈசன்
கிடந்ததோர் கிடக்கை கண்டும்
எங்ஙனம் மறந்து வாழ்கேன்?
ஏழையேன் ஏழை யேனே. 2

குலம்தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுது யராயின வெல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள்விசும் பருளும்
அருளொடு பெருநில மளிக்கும்

வலந்தரும் மற்றுந் தந்திடும் பெற்ற
தாயினும் ஆயின செய்யும்
நலந்தருஞ் சொல்லை நான்கண்டுகொண்டேன்
நாராயணா வென்னும் நாமம். 3

அம்பரமே தண்ணீரே சோறே அறஞ்செய்யும்
எம்பெருமான்! நந்தகோபாலா! எழுந்திராய்!
கொம்பனார்க் கெல்லாம் கொழுந்தே! குலவிளக்கே!
எம்பெருமாட்டி யசோதாய்! அறிவுறாய்
அம்பர மூடறுத் தோங்கி உலகளந்த
உம்பர் கோமானே! உறங்காது எழுந்திராய்
செம்பொற் கழலடிச் செல்வா! பலதேவா!
உம்பியும் நீயும் உறங்கேலோ ரெம்பாவாய். 4

வாரணமாயிரம் சூழ வலஞ்செய்து
நாரண நம்பி நடக்கின்றானென்று எதிர்
பூரண பொற்குடம் வைத்துப் புரமெங்கும்
தோரணம் நாட்டக் கனாக்கண்டேன் தோழி நான். 5

இந்திர னுள்ளிட்ட தேவர்குழா மெல்லாம்
வந்திருந்து என்னை மகட்பேசி மந்திரித்து
மந்திரக் கோடி யுடுத்தி மணமாலை
அந்தரி சூட்டக் கனாக் கண்டேன் தோழி! நான் 6

மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்து டைத்தாமம் நிரைதாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மது சூதன் வந்து என்னைக்
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழி! நான் 7

வாய்நல்லார் நல்ல மறையோதி மந்திரத்தால்
பாசிலை நாணல் படுத்துப் பரிதிவைத்து
காய்சின மாகளி றன்னான்என் கைப்பற்றி
தீவலஞ் செய்யக் கனாக்கண்டேன் தோழி! நான். 8

ஆயனுக் காகத் தான்கண்ட கனாவினை
வேயர் புகழ்வில்லி புத்தூர்க்கோன் கோதைசொல்
தூயதமிழ் மாலை ஈரைந்தும் வல்லவர்
வாயுநன் மக்களைப் பெற்று மகிழ்வரே 9

தருதுயரம் தடாயேல் உன்சரணல்லால் சரணில்லை
விரைகுழுவும் மலர்ப் பொழில்சூழ் வித்துவக்
கோட்டம்மானே!
அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும்
மற்றவள் தன்
அருள்நினைந்தே யழும்குழவி யதுவேபோன்
றிருந்தேனே. 10

வந்தாய் என்மனம் புகுந்தாய் மன்னிநின்றாய்!
நந்தாத கொழுஞ்சுடரே! எங்கள் நம்பீ!
சிந்தாமணியே! திருவேங்கடம் மேய
எந்தாய்! இனியான்உன்னை என்றும் விடேனே 11

வேதத்தை வேதத்தின் சுவைப்பயனை
விழுமிய முனிவர் விழுங்கும்
கோதிலின் கனியை நந்தனார் களிற்றைக்
குவலயத் தோர்தொழு தேத்தும்
ஆதியை அமுதை என்னை யாளுடை
யப்பனை ஒப்பவ ரில்லா
மாதர்கள் வாழும் மாடமா மயிலைத்
திருவல்லிக் கேணிக் கண்டேனே. 12

வாழக்கண்டோம் வந்துகாண்மின் தொண்டீர்காள்
கேழல் செங்கண் மாமுகில் வண்ணர் மருவுமூர்
ஏழைச் செங்கால் இன்துணை நாரைக்கு இரைதேடி
கூழைப் பார்வைக் கார்வயல் மேயும் குறுங்குடியே 13

பாருருவி நீரெரிகால் விசும்பு மாகிப்
பல்வேறு சமயமுமாய்ப் பரந்து நின்ற
ஏருருவில் மூவருமே யென நின்ற
இமையவர் தம் திருவுருவே றெண்ணும்போது
ஓருருவம் பொன்னுருவம் ஒன்று செந்தீ
ஒன்று மாகடலுருவம் ஒத்து நின்ற
மூவுருவும் கண்டபோது ஒன்றும் சோதி
முகிலுருவம் எம்மடிக ளுருவந் தானே 14

மனமாசுதீரும் அருவினையும் சாரா
தனமாய தானே கைகூடும் — புனமேய
பூந்துழாயானடிக்கே போதொடு நீரேந்தி
தாம்தொழா நிற்பார் தமர் 15

நல்ல கோட்பாட் டுலகங்கள்
மூன்றினுள்ளும் தான் நிறைந்த
அல்லிக் கமலக் கண்ணனை
அந்தண் குருகூர்ச் சடகோபன்
சொல்லப் பட்ட ஆயிரத்துள்
இவையும் பத்தும் வல்லார்கள்
நல்ல பதத்தால் மனைவாழ்வர்
கொண்ட பெண்டிர் மக்களே 16

வாழி பரகாலன் வாழி கலிகன்றி
வாழி குறையலூர் வாழ்வேந்தன்—வாழியரோ
மாயோனை வாள்வலியால் மந்திரங்கொள்
தூயோன் சுடர்மான வேல். [மங்கையர்கோன்

## மதச் சார்பற்ற இறை வணக்கம்

பொருளாகக் கண்ட பொருள் எவைக்குமுதற்
    பொருளாகிப் போத மாகித்
தெருளாகிக் கருதுமன்பர் மிடிதீரப்
    பருகவந்த செழுந்தே ளுகி,
அருளானுர்க் ககம்புறம்என் றுன்ளுத
    பூரணவா னந்தமாகி
இருள்தீர விளங்கு பொருள் யாதந்தப்
    பொருளினையாம் இறைஞ்சி நிற்பாம்.

### மண மக்கள் வாழ்த்து

அன்பு மிக்க அருமை மணமக்கள் வாழ்கவே
இன்பு பொங்க என்று மிவர் இனிது வாழ்கவே.
மணியு மொளியு மலரின்மணம்போல் மகிழ்ந்து வாழ்கவே
குணமுடனே கடமை யாற்றிக் குலவி வாழ்கவே.
அறிவு மிக்க மக்கள் பெற்று அணியாய் வாழ்கவே
செறிவு மிக்க செல்வ மோங்கிச் செழித்து வாழ்கவே.
ஏழைகளுக் கென்று மிரங்கி இனிது வாழ்கவே
வாழையடி வாழையென வழியும் வாழ்கவே.
சாதி சமய பேத மொழித்துத் தழைத்து வாழ்கவே
நீதியான அன்பு பெருகி நிறைந்து வாழ்கவே.
எங்கும் நிறைந்த இறைவனருளை எண்ணி வாழ்கவே
தூங்க முடைய தூயர் சொல்லைத் தொடர்ந்து வாழ்கவே.
எவ்வுயிர்க்கும் அன்பு வைத்து எழிலின் வாழ்கவே
செவ்விதான நெறியைப் பற்றித் தெளிந்து வாழ்கவே.

நோயிலாது வண்மை பெற்று நீடு வாழ்கவே
தேயம் போற்றத் தொண்டு செய்து சேர்ந்து வாழ்கவே.
ஊழி ஊழி உவகை பொங்கி ஓங்கி வாழ்கவே
வாழி வாழி வாழி மண மக்கள் வாழ்கவே."

## பொது வாழ்த்து

மாதமும் மாரி பெய்க ; மண்ணினில் வளஞ்சிறக்க ;
தீதிலா அறங்க ளோங்க ; செய்தொழில் திகழ்ந்து மல்க ;
கோதிலாக் கல்வி பல்க ; குன்றிடா அன்பே வெல்க ;
மாதுயர் யாவும் நீங்கி மன்னுயிர் வாழ்க மன்றே.

## இறை வாழ்த்து

அன்பே போற்றி அறிவே போற்றி
இன்பே போற்றி இறையே போற்றி
எங்கும் நிறைந்த எழிலே போற்றி
மங்கல மான மகிழ்வே போற்றி
கண்ணே போற்றி கருத்தே போற்றி
எண்ணே போற்றி எழுத்தே போற்றி
உயிருக் குயிராய் உள்ளாய் போற்றி
உணர்வுக் குணர்வாய் உறைவாய் போற்றி
ஆணாய்ப் பெண்ணாய் அமைந்தாய் போற்றி
காணாப் பொருளாய்க் கலந்தாய் போற்றி
பூவாய் மணமாய்ப் பொலிந்தாய் போற்றி
நாவாய்ச் சுவையாய் நயந்தாய் போற்றி
அம்மை போற்றி ஐய போற்றி
செம்மை மேவும் செல்வா போற்றி
அன்பே கொள்ளும் அழகே போற்றி
துன்பே துடைக்குந் தூயோய் போற்றி

எல்லாப் பொருளும் ஈவோய் போற்றி
சொல்லாப் பொருளாய்த் தொடர்வாய் போற்றி.
வேண்டும் பொருளை விளைப்பாய் போற்றி
தூண்டும் சுடராய்த் துலைவாய் போற்றி
விருப்பம் முடிக்கும் விமலா போற்றி
விண்ணே போற்றி வித்தக போற்றி
போற்றி போற்றி புனித போற்றி
போற்றி போற்றி புண்ணிய போற்றியே.

பொன்னுகி மணியாகிப் போக மாகிப்
புறமாகி யகமாகிப் புனிதமாகி
மன்னுகி மலையாகிக் கடலுமாகி
மதியாகி ரவியாகி மற்றுமாகி
முன்னுகிப் பின்னுகி நடுவுமாகி
முழுதாகி நாதமுற முழங்கி யெங்கும்
மின்னுகிப் பரவி யின்ப வெள்ளம் தேக்க
வியன்கருணை பொழிமுகிலாய் விளங்கும் தேவே

—பேராசிரியர் மணி. திருநாவுக்கரசு முதலியார்.

## பண்டையோர் வாழ்த்திய முறை

1. பொற் கோட்டு இமயமும் பொதியமும் போன்று வாழ்க.
2. நன்னீர்ப் பஃறுளி மணலினும் பல்லாண்டு வாழ்க.
3. கொண்டல் மாமழை பொழிந்த நுண்பல் துளியினும் வாழிய பலவே.
4. மிக்கு வரும் இன் நீர்க் காவிரி எக்கர் இட்ட மணலினும் பலவே சிறக்க நின் ஆயுள்.

5. வானத்து வயங்கு பன்மீனினும் வாழியர் பன்னாள்.
6. நன்னிலை உலகினுள் நாவல் போலவும் பொன்னணி நெடுமலை போலவும் பொழில் வயின் மன்னுக இவர்.
7. வெங்கதிர்ச் செல்வன் போலவும் தண் கதிர் மதியம் போலவும் இவ்வுலகம் உள்ளளவும் நிலைத்து வாழ்வீராக.
8. கற்பின் வழுவாது நன்மைகள் பலவும் புரிந்து கணவனால் விரும்பப் பெறும் காரிகையாய் விளங்குவாயாக.
9. வழிபடு தெய்வம் நிற்புறம் காப்பப் பழிதீர் செல்வமொடு வழி வழி சிறந்து பொலிமின்.

உருவளர் வயது பூமி உயர்தவம் கருணை யூக்கம்
பெருநிதி யொழுக்கம் சீலம் பேரறி மானம் கல்வி
பொருவலி விசயம் வீரம் புண்ணிய மாதின் போகம்
திருமலி புகழீரெட்டும் பெற்றுநீர் வாழிவாழி.

ஆன்றோர் அமுத மொழிகள் :

# திருமணத்தின் அவசியம்.

வாழ்க்கை என்பது இயற்கையில் அமைந்தது. வாழ்க்கை எது? பலர் பலவாறு கூறுவர். வாழ்க்கை இல்வாழ்க்கையின் சுருக்கமாகும். வாழ்க்கையே இல் வாழ்க்கை. இல் வாழ்க்கையே வாழ்க்கை. 'அறனெனப்பட்டதே இல் வாழ்க்கை' என்பது திருவள்ளுவர் திருவாய்மொழி.

இத்தகைய இல்வாழ்க்கையை ஓம்புவது அறிஞர் கடமை.

வாழ்க்கையைக் குறிக்கொண்டது திருமணம். அத் திருமணத்தை இழப்பது வாழ்க்கைச் செல்வங்களையெல்லாம் இழப்பதாகும். வாழ்க்கையின் நோக்கங்களையெல்லாம் நிறைவேற்றும் ஆற்றல் வாய்ந்தது திருமணம் என்று சுருங்கச் சொல்லலாம்.

* * *

வாழ்க்கையை உண்டுபண்ணி அதை வளர்க்கும் ஆற்றல் வாய்ந்த திருமணத்துக்குரிய இளமையா கொடியதாகும்? ஆகாது. அதைக் கடிவது வாழ்க்கையையே கடிவதாகும்.

இத்துணைச் சிறப்புவாய்ந்த இளமையை என்னவென்று சொல்வது? தெய்வத்தன்மையின் முகிழ்ப்பு இளமை என்று சொல்வது முறைமையாகும்.

—பெரியார் திரு. வி. க., அவர்கள்.

உண்மை அன்பு அழலைப்போல் தூய்மையான ஒரு பொருள். தியாகம் இன்றி, செருக்கை மறந்தாலன்றி, உள்ளத்தை உள்ளம் உணர்ந்தாலன்றி உண்மையான அன்பு செய்ய முடியாது.

—வி. ஸ காண்டேகர்.

'நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகம்'

—பாரதிதாசனர்.

மலரிலே தேன் நிறைந்திருப்பது; மணியும் ஒலியும் பிரிக்கமுடியாத இயல்புடன் ஒன்றாக இணைந்திருப்பது; வண்டியிலே சேர்த்துப் பணிபுரியக் குதிரைகள் பூட்டப்படுவது—இவைகளைப்போலவே கணவனும் மனைவியும் உள்ளம் ஒத்துச் செயலாற்றக் கடமைப்பட்டவர்கள்.

* * *

ஆண்மக்களுக்குக் கல்வி யளித்து, பெண் மக்களுக்குக் கல்வி மறுத்தலானது நம் உடலில் பாதியை அழகுசெய்து மற்றொருபாதியினை ஒரு அணியுமின்றி விட்டுவிடுதலை யொக்கும்.

* * *

மண வாழ்வுக்கு முன்பே மணமக்களின் குண நலன்களை ஆராய்ந்தறிதல் வேண்டுமேயன்றி மணமானபின் ஒருவரையொருவர் ஆராயப் புகுதல் நடுக்கடலில் செல்லுகின்ற கப்பலின் திண்மையை ஆராய்ந்து கப்பல் பழுதுபட்டது எனச் சொல்லுகின்ற மடமையினையும், உடலுறுப்பு ஒன்றில் உண்டான நோய்க்காக அவ்வுறுப்பினையே களைதலையும் ஒக்கும்.

* * *

"சுவரில் காணப்படுவது ஒரு ஆணின் உருவமாகுமானால் நான் பார்க்க மாட்டேன். பெண்ணின் உருவமாகுமானால் கணவனாகிய நீர் பார்த்து அதன் அழகில் ஈடுபடுவதையும் பொறுக்க மாட்டேன்" என்பவள் கற்புடைப் பெண்மணி.

—வேதநாயகம் பிள்ளை

அவன், அவள் என்னும் இரண்டு சொற்களிலேயே நல்ல கணவன் மனைவியரின் ஒருமையுள்ளம் புலப்படுகின்றது.

—'அமரன்'

'ஆண் பெண் இருவரின் இரு வேறு மனங்கள் ஒன்று மற்றொன்றில் கரைந்துபோகும் தன்மையைக் காமத்துப்பால் கூறுகின்றது; கணவனும் மனைவியுமாகிய இருவர் ஒரு மனம் உடையவராய் உலக நன்மை கருதி வாழும் தன்மையை இல்லறம் காட்டுகின்றது.'

—டாக்டர் மு. வரதராசனார், M A,

ஆண் பெண் வாழ்க்கை அன்பு வளர்க்கை
பெண்மையில் முன்னும் ஆண்மை அதிகம்
பெண்சொற் கேட்டல் பெரிய தவமே
பெண்மையில் தாய்மை தாய்மையில் இறைமை
காதல் பெருக்கம் தாய்மை அன்பே
தாய்மை அன்பே இறைமைக் கருணை
வாழ்க பெண்மை! வாழ்க காதல்!

—பெரியார் திரு. வி. க. அவர்கள்.

உலகில் மனித வாழ்க்கை தோன்றிய நாள் முதல் இதுவரையில் அநேகம் மாறுதல்கள் உண்டாயிருக்கின்றன. ஆனால் இயற்கையின் அழகு,

காதலின் சிறப்பு - இந்த இரண்டு விஷயங்களிலும் எவ்வித மாறுதலும் உண்டாகவில்லை. பண்டைக் காலத் தமிழ் மக்கள் இவ்விரண்டையும் அதிகம் அனுபவித்திருக்கிறார்கள்.

—அறிஞர் ஆர். கே. எஸ்.

கலியாணம் என்பது ஒரு ஆணும் பெண்ணும் கூடி இன்பத்தை நுகரவும் ஒருவரை ஒருவர் காதலித்து, ஒருவருக்கொருவர் வாழ்க்கைப் போட்டியில் ஏற்படும் சிரமத்துக்கு இளைப்பாறவும், ஆயாசம் தீர்த்துக் கொள்ளவுமே ஆணுக்கு ஒரு பெண்ணும், பெண்ணுக்கு ஒரு ஆணும் வேண்டியிருக்கிறது என்பதைப் பெரும்பாலோர் சிந்திப்பதே இல்லை.

—பெரியார் ஈ. வே. ரா.

திருமணம் என்பது ஆண் பெண் உடன்படிக்கை மட்டுமல்ல; அது ஒரு சமுதாய ஒப்பந்தம்; பொருளாதாரப் பங்கீடு.

— இங்கர்சால்.

காதல் நோய்க்கு மாற்று மருந்து உண்டு. அதுவே திருமணம்.

—ஹெலன் ரோலண்டு.

திருமணம் என்பது ஆண் பெண் நட்பு நம்பிக்கை யில்லாமல் நட்பு நீடிக்காது. நம்பிக்கையே நேர்மையிலிருந்து மலரும் பூ.

— ஜான்சன்.

கனியிருப்பது ரசம்பருக, மலர் இருப்பது மணம் நுகர, வாழ்க்கை யிருப்பது இன்பக்கேணியில் குளிக்க.

—அறிஞர் அண்ணா.

"ஒரு நல்ல மனைவி, கடவுள் மனிதனுக்குக் கொடுக்கக் கூடியவைகளில் சிறந்த பொருளாவாள். கணவன் அடையக் கூடியவைகளில் நல்ல மனைவியே முதன்மையானவள். நல்ல மனைவி நவரத்தினங்கள் நிறைந்த பெட்டி போன்றவள். அவள் குரலொலி இசையினும் இனியது. அவள் புன் சிரிப்பு அன்றைய தினத்தை ஒளி உள்ளதாக்குகின்றது. அவள் முத்தம் கணவனுடைய அறியாமைக்குப் பாதுகாப்பாய் இருக்கின்றது. அவள் கரங்கள் அவனைக் காப்பாற்றுகின்றன. அவளுடைய முயற்சி அவனுக்கு உண்மையான செல்வமாகின்றது. அவளுடைய சிக்கனம் அவனுடைய பாதுகாப்புள்ள மேற்பார்வையாளனாய் இருக்கின்றது. அவள் உதடுகள் அவனுக்கு ஆலோசனை சொல்வதற்காக அசைகின்றன."

Jeremy Taylor.

"ஒரு பெண்ணினால் எனக்கு என்ன நேர்ந்தாலும் சரி, மேலும் மேலும் அவள் எதைச் செய்தாலும் சரி, நான் என்னால் முடிந்தவற்றை யெல்லாம் செய்து அவளுக்கு மகிழ்ச்சியையும், திருப்தியையும் உண்டாக்குவேன். இதை நான் செய்யத் தவறினால் இதை விட எனக்குத் துன்பத்தைத் தரக்கூடிய செயல் வேறொன்று மிருக்க முடியாது."

Abraham Lincoln: Letter to Mrs. O. H. Browning.

April 1, 1838.

"மகிழ்ச்சியுள்ள கலியாணம் வாழ்க்கையின் புதிய தொடக்கமாகும். மகிழ்ச்சிக்கும், பல வித நன்மைகளுக்கும் அது ஆரம்ப இடமாகின்றது."

A. P. Stanley.

"திருக்குறள் மக்களுக்கு வழி காட்டி; கலங்கரை விளக்கம். அது சொல்லுகிறபடி வாழ்ந்தால் துன்பமில்லாத இடத்தை அடையலாம்."

Rev. G. U. Pope.

"உண்மை மிக மிக உயர்ந்தது. அதுதான் நிலைத்திருக்கக் கூடியது."

Bible, Vulgate Edition, III Esdras, IV 41.

"மனிதன் நல்லவனுய் வாழ்வதற்கு வழிகாட்டுகின்ற எந்த மதமும் சிறந்ததுதான்."

Thomas Paine, Rights of Man.

"நூற்றுக் கணக்கான வழிகளில் விரிவுரை செய்யப் பட்டாலும் மதம் என்பது ஒன்றுதான்."

George Bernard Shaw, Plays Pleasant and Unpleasant.

"கடவுளை வணங்குவதே மதம். அதுவே எல்லா நீதிகளும்."

Duke of Wellington.

"உலகம் அறியாத பல நன்மைகள் கடவுளைத் துதிப்பதனுல் உண்டாகின்றன."

Tennyson, Morte d' Arthur.

"உன்னுடைய உடை அழுக்கடைந்தாலும் உன் மனம் மட்டும் பரிசுத்தமாயிருக்கட்டும்."

Mark Twain, Pudd' Nhead Wilson's Calendar.

"இயற்கை அளிக்கும் இன்பங்கள் எல்லாவற்றிலும் குழந்தைகளைப் பார்க்கிலும் சிறந்த இன்பம் வேறு என்ன இருக்க முடியும்!"

Cicero, Post Reditum Ad Quirites.

"உண்மையான அறிவு இறந்த காலம், நிகழ் காலம் ஆகிய வற்றைப் பற்றி மட்டும் அறிவதல்ல. எதிர் காலத்தைப் பற்றி அறிவதும் ஆகும்."

Terence, Adeplphi.

"இன்பமும் துன்பமும் நம்முடைய செய்கைகளுக்கு ஏற்ற வாறு இருக்கின்றன."

Shakespeare. Troilus and Cressida.

"சுயநலம் குறையும் போது புகழ் பெருக ஆரம்பிக்கின்றது."

Ovid, Amores.

"மேது எண்ணத்திற் கேற்றபடி நமது இன்பம் குறைவாகவோ அதிகமாகவோ இருக்கின்றது."

Abraham Lincoln.

"எதிர்காலத்தில் நீ மகிழ்ச்சியோடு இருக்க விரும்பினல் இப்பொழுதே நீ மகிழ்ச்சியோடு இருப்பதற்கேற்ற நல்ல வழியைத் தேடிக்கொள்ள வேண்டும்."

Charles W. Eliot. The Happy Life.

"உழைப்பு ஒவ்வொருவரும் வரவேற்கக் கூடியது. அது மக்களின் மேன்மைக்குக் காரணமாயிருக்கின்றது"

Tolstoy, My Religion.

"உழைக்க வேண்டு மென்பது வாழ்க்கையின் சட்டம். வாழ்க்கையின் இன்பப் பழமாய் இருப்பதும் அதுதான்."

Lewis Morris, The Ode of Perfect Years.

"மரியாதை மக்களை மேன்மைப் படுத்துகின்றது."

Daniel Defoe, Complete Gentleman.

[தொகுத்தவர்: எஸ். எஸ். அருணகிரிநாதர்]

# மணமக்களுக்கு வள்ளுவர் கூறும் அறநெறி

1. கணவன் :

தன் வாழ்க்கைத்துணைவியோடு இல்லறம் நடத்தும் ஒருவன் பிரமசாரி, வானப்பிரஸ்தன், சந்நியாசி ஆகிய மூவகையினருக்கும் அவர்கட்கு வேண்டிய நன்மைகளைச் செய்தல் வேண்டும். சுற்றத்தாரால் காக்க முடியாமல் கைவிடப்பட்டவர், வறுமையால் வருந்துகின்றவர், நோய் கொடி மூப்பு முதலியவைகளால் வருந்தி ஆதரவு அற்று இறந்து போனவர் ஆகிய இவர்கட்கும் இல்லற நிலையில் இருப்பவன் ஆதரவாக இருந்து செய்யத் தக்கனவற்றைச் செய்தல் வேண்டும்.

நீத்தார் வழிபாடு, கடவுள் வணக்கம், விருந்தினரை உபசரித்தல், சுற்றத்தாரைப் போற்றுதல், தன்னையும் தன் குடும்பத்தையும் காப்பாற்றிக் கொள்ளுதல் ஆகிய இவைகள் இல்வாழ்வானுக்கு மிகவும் முக்கியமான செயல்கள் ஆகும்.

உலக நிந்தனைக்குப் பயந்து நேர்மையான வழியிலே பொருளைத் தொகுத்து மேலே கூறிய படி அவரவருக்குத் தக்க வண்ணம் பகுத்துக் கொடுத்து இல்லற வாழ்க்கையை நடத்தினல் அவன் குடும்பக் கால்வழி இவ்வுலகில் என்றும் நிலைத்து வாழ்ந்திருக்கும்.

இல்வாழ்வான் என்பவன் எல்லோரிடத்தும் அன்பாக இருக்கும் தன்மையும் நல்வழியில் ஒழுகும் செயலும் உடையவனக இருத்தல் வேண்டும். அவ்விதம் இருத்தலே இல்வாழ்க்கையின் சிறந்த தன்மையாகும். அவ்வாழ்க்கையால் அடையும் பயனும் அதுவேயாகும்.

நீதி நூல்களில் கூறியுள்ளபடி ஒருவன் இல்வாழ்க்கையைத் தவருது நடத்தி வருவாளுனல் அவன் பிறகு துறவறத்துக்குச் செல்லவேண்டியதே இல்லை. இவ்வுலக இன்பம், மறு உலக இன்பம், எல்லாவற்றையும் இல்வாழ்க்கையில் இருந்தே அவனால் அடையமுடியும்.

இல்வாழ்க்கையில் இருந்து அதற்குரிய வகையோடு வாழ்ந்து வருவது பிற வாழ்க்கைகள் எல்லாவற்றினும் சிறந்தது.

நீதி நூல்களில் கூறியுள்ளபடி வழுவாமல் நடந்து மற்றவர்களையும் அவ்வாறு வழுவாமல் வாழச் செய்யும் இல்வாழ்க்கை காட்டில் இருந்து தவம்புரியும் வாழ்க்கையைவிடச் சிறந்தது.

இல்லறம், துறவறம் ஆகிய இவ்விரண்டு அறங்களுள் 'அறம்' என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது இல்லறமேயாகும். அத்தகைய இல்லறமும் பிறரால் பழிக்கப்படாமலும் இருத்தல் வேண்டும். அப்போதுதான் அதற்கு அந்தப் பெருமை உண்டாகும்.

இந்த உலகத்திலே இல்வாழ்க்கையில் இருந்து வாழவேண்டிய முறைப்படி ஒருவன் வாழ்வாளுயின் அவனை வானுலகில் வாழும் தேவர்கட்குச் சமமாக உலகத்தார் மதிப்பர்.

2. மனைவி :

ஒரு நல்ல மனைவி இல்லற வாழ்க்கைக்குத் தகுந்த நற்குண நற் செய்கைகளையும், தன் கணவனது வருவாய்க்குத் தகுந்த வாழ்க்கையையும் உடையவளாய் இருத்தல் வேண்டும். அத்தகைய

மனைவி இல்லற வாழ்க்கைக்கு ஒரு சிறந்த துணை யாவாள்.

இல்லற வாழ்க்கைக்குத் தகுந்த நற்குண நற் செய்கைகள் ஒரு மனையாளிடத்தில் அமைந்திருத்தல் வேண்டும். இல்லையானால் அந்த இல்லற வாழ்க்கை எப்படிப் பட்ட பெருமையை உடையதானாலும் பயனற்றதாகும்.

நற்குண நற்செய்கைகளையுடைய மனைவியைப் பெற்ற கணவனிடத்து இல்லாத செல்வம் இல்லை. மனைவியினிடத்து நற்குண நற்செய்கைகள் இல்லை யானால் கணவனிடத்து எந்தச் செல்வமும் இருப்ப தாகக் கொள்ள முடியாது.

அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றையும் அடைவதற்குத் துணையாய் இருப்பவள் கற்புடைய மனைவி. ஒருவன் அடையக் கூடிய பொருள்களுள் அப்படிப்பட்ட கற்புடைய மனைவியினும் உயர்வாகிய பொருள் வேறு ஒன்றும் இல்லை.

ஒரு மனைவி, கடவுளை வழிபடாவிட்டாலும் எல் லாத்தெய்வமும் தன் கணவனே என்று கருதி முறை தவறாது தன் கணவனை வழிபடுவாளாயின் அவள் "பெய்" என்று சொல்ல மழை பெய்யும்.

கற்பினின்று வழுவாமல் தன்னைத்தானே காத்துக்கொள்வது ஒரு மனைவியின் கடமை. தன்னை மனைவியாகக் கொண்ட கணவனை உணவு முதலிய வற்றால் உபசரிப்பது அவளது இயல்பு. தன் னிடத்தும் தன் கணவனிடத்தும் நன்கமைந்த புகழ் தம்மைவிட்டு நீங்காத வகையில் நற்குண நற் செயல்களை மறவாது இல்வாழ்க்கை நடத்துதல் அவ

ளது பெருமை. இத்தகைய இயல்புகள் வாய்ந்தவளே பெண்.

மதில், வாயிற்காவல் முதலியவற்றால் பெண்களைக் காவல் செய்வது என்ன பயனைத் தரும். அவர்கள் தமது நெஞ்சைக் கற்புநெறியில் நிறுத்தித் தம்மைத் தாமே காத்துக் கொள்ளும் காவலே மேலான காவலாகும்.

தம் கணவரை முறையோடு உபசரிக்கும் இயல்பினைப்பெற்ற மனைவியர் தேவர்கள் வாழ்கின்ற வானுலகத்திலே இருப்பதாகக் கூறப்படும் பெரிய சிறப்புக்களையும் இவ்வுலகத்திலேயே பெறுவர்.

புகழை விரும்புகின்ற மனைவி நற்குண நற்செய்கைகளை மறவாது இல்வாழ்க்கையை நடத்துவாள். அவளுடைய கணவன் தன்னைப் பழிப்பவர்கள் இல்லையாகிச் சிங்க ஏறு போலப் பெருமித நடை நடப்பான். ஆனால் புகழை விரும்புகின்ற மனைவியைப் பெறாதவர்கள் தம்மை இகழும் தமது பகைவர் முன்னே அப்படிப்பட்ட பெருமிதத்தோடு நடக்கமுடியாது.

ஒரு கணவனுக்கு அவனுடைய மனைவியின் நற்குண நற்செய்கைகளே நன்மை யாவன. அந்த நற்குண நற்செய்கைகளுக்கு அழகு செய்யும் அணி யாவது நல்ல புதல்வரைப் பெறுதல்.

### 3. குழந்தை :

ஒருவன் அடைவதற்குரிய செல்வங்களுள் சிறந்தது அறிவிற் சிறந்த குழந்தைகளைப் பெறுதலே யாகும். குழந்தைச் செல்வம் அல்லாத மண், பொன்

முதலிய பிற செல்வங்களைக் குழந்தைச் செல்வத்திலும் சிறந்த செல்வமாக மதிப்பதற்கில்லை.

பிறரால் பழிக்கப்படாத நற்குணங்களையுடைய புதல்வர்களைப் பெற்றவர்களைத் துன்பம் அணுகாது. அவர்கள் ஏழு பிறவிகள் பிறக்க வேண்டியிருந்தாலும் அப்பிறவிகளால் அவர்கள் துன்பம் அடைய மாட்டார்கள்; இன்பமாகவே இருப்பார்கள்.

மக்களுடைய நல்வினையினாலே விளையும் பொருள் அவர்தம் பெற்றோரைச் சேரும். எனவே மக்கட் செல்வமே ஒருவர்க்குச் சிறந்த செல்வமாகும். அச் செல்வம் பெற்றோர் செய்த நல்வினைப் பயனால் அவரை வந்து அடையும்.

தாய் தந்தையர் உண்ணும்போது அவர்தம் குழந்தைகள் உடனிருந்து தமது சிறிய கைகளால் துழாவிய உணவானது சுவையினால் மிகுந்த அமிழ்தத்தினும் மிக்க இனிமையுடையதாம்.

தம்முடைய குழந்தைகளின் உடம்பைத் தொடுவது தாய் தந்தையரின் உடம்புக்கு இன்பம்தரும். குழந்தைகள் பேசும் சொற்கள் அவர்தம் தாய் தந்தையரின் செவிக்கு இன்பம் அளிக்கும்.

குழலோசையும் யாழிசையும் இனிமையுடையன. ஆனால் தம் குழந்தைகளின் மழலைச் சொற்களைக் கேட்டு இன்புற்ற பெற்றோர் அம் மழலைச் சொற்கள் குழலோசையினும் யாழிசையினும் இனிமையுடையன என்பார். தம் குழந்தைகளின் குதலைச் சொற்கள் கேளாதவரே குழலோசையும் யாழிசையும் இனியன என்பார்.

தந்தை தன் மகனுக்குச் செய்யும் நன்மை ஒன்று உண்டு. அஃது கற்றவர் கூடிய அவையிலே

தன் மகன் மேம்பட்டிருக்கும்படி அவனைக் கல்வி யறிவுடையவனாக்குதல்.

தம் மக்கள் இயல்பாகிய அறிவோடு கல்வி யறிவையும் பெற்றிருத்தலைக் கண்டு பெற்றோர் மகிழ்வர். ஆனால் அவ்வறிவுடைமையை அறிந்து இந்நிலவுலகத்தில் நிலைபெற்ற கல்வியறிவுடையார் பெற்றோரினும் பெருமகிழ்ச்சி கொள்வர்.

குழந்தையைப் பெறும்போது தாய் அடையும் துன்பம் பெரிது. ஆயினும் தான் பெற்ற குழந்தை ஆண் குழந்தை என்பதை அறிந்ததும் அவள் அடையும் மகிழ்ச்சியும் பெரிது. இம்மகிழ்ச்சியிலும் தன் மகன் கல்வி கேள்விகள் நிறைந்தவன் எனச் சான்றோர் சொல்லக் கேட்கும் போது அந்தத் தாயின் மகிழ்ச்சி அளவு கடந்து நிற்கின்றது.

தன்னைக் கல்வியுடையவனாக்கிய தன் தந்தைக்கு மகன் செய்யும் நன்மை ஒன்று உண்டு. அஃது தன் அறிவையும் ஒழுக்கத்தையும் கண்டவர் "இவனைப் பெறுதற்கு இவன் தந்தை என்ன நல்வினை செய்தானோ" என்று சொல்லும்படியாகத் தன்னை ஆக்கிக் கொள்ளுதல்.

நாலடியார் நல்லுரை

**குடம்நீர் அட்(டு) உண்ணும் இடுக்கண் பொழுதும்**
**கடல்நீர் அறஉண்ணும் கேளிர் வரினும்**
**கடன்நீர்மை கையாறுக் கொள்ளும் மடமொழி**
**மாதர் மனைமாட்சி யாள்.**

**விளக்கம் :** ஒரு குடம் நீரால் சோறு அமைத்து உண்ணுமாறு மிடிப்பட்ட காலத்தும் மனைக்கு மாட்சிமை யுடையாள் கடல்நீரை வற்ற உண்ணும் கேளிர் (சுற்றம்) வரினும் இல்லறம் நிகழ்த்துதலை வாழ்க்கைக்கு நெறியாகக் கொள்ளுவாள் எனத் தலைவன் வியந்து கூறினான். —நச்சினார்க்கினியர்.

தமிழ்ப்பேராசிரியர் **மயிலை. சிவ முத்து.**

# திருக்குறள் — காமத்துப்பால்.

1. அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலும் என் நெஞ்சு.

இவள் இச் சோலையில் வாழும் தெய்வமகளோ, சிறந்த மயிலோ, அல்லது மக்கள் இனத்தைச் சேர்ந்த பெண்தானோ: இவள் இன்ன வகையைச் சார்ந்தவள் எனத் துணிந்து சொல்ல முடியாமல் என் மனம் மயங்குகின்றது.

2. இருநோக் கிவளுண்கண் உள்ள தொருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து.

இவளுடைய மைதீட்டிய கண்களுக்கு இரண்டுவகையான பார்வை இருக்கின்றது. அவற்றுள் ஒரு பார்வை நோயை உண்டாக்குவது, மற்றொரு பார்வை அந்நோய்க்கு மருந்து.

3. ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்
காதலார் கண்ணே உள.

புறத்தே, அயலார்போல் அன்பில்லாத பொது நோக்கால் நோக்குதல் அகத்தே காதல் கொண்டவரிடம் உள்ள ஓர் இயல்பு ஆகும்.

4. கண்ணொடு கண்இணை நோக்கொக்கின் வாய்ச்
என்ன பயனும் இல. [சொற்கள்

காதலொடு கூடிய இருவர் கண்களுள் ஒருவர் கண்கள் மற்றொருவரது கண்களை நோக்குமேயானால் அவர்கள் சொல்லக் கூடிய வாய்ச்சொற்களால் ஒரு சிறிதும் பயன் இல்லை.

5. கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள.

கண்ணால் கண்டும், காதால் கேட்டும், நாவால் சுவைத்தும் மூக்கால் மோந்தும், உடம்பால் தொட்டும் அனுபவிக்கப்படும் ஐம்புல இன்பங்களும் ஒளி பொருந்திய வளையலணிந்த இவளிடத்தே உள்ளன.

6. தம்மில் இருந்து தமதுபாத்து உண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு.

மாநிறமுடைய இவ்வழகிய மங்கையினது சேர்க்கை, தம் வீட்டிலிருந்து தம்முடைய முயற்சியால் வந்த பொருளைத்

தமக்கு உரியவர் யாவருக்கும் பகிர்ந்துகொடுத்துத் தாமும் தமக்குரிய பாகத்தை அனுபவிப்பதைப் போன்ற இன்பத்தைத் தருகின்றது.

7. ஊடல் உணர்தல் புணர்தல் இவைகாமம்
கூடியார் பெற்ற பயன்.

சேர்க்கை இனியதாகும்பொருட்டு ஊடுதலும், அவ்வூடலினின்று அளவறிந்து நீங்குதலும், பின் கூடுதலும் ஆகிய இவை காதலால் பிணிக்கப்பட்டவர்கள் பெற்ற பயன்களாகும்.

8. அறிதோறும் அறியாமை கண்டற்றால் காமம்
செறிதோறும் சேயிழை மாட்டு.

நூல்களை ஊன்றிப் படிக்குந்தோறும் முன்பு இருந்த அறியாமையை உணர்ந்துகொள்வது போன்று சிறந்த ஆபரணங்களை அணிந்த இவளிடம் சேருந்தோறும் இவள்பால் உள்ள காதல் புதுமையாய் மேன்மேலும் மிகுந்து இன்பத்தைத் தருகின்றது.

9. நன்னீரை வாழி அனிச்சமே நின்னினும்
மென்னீரள் யாம்வீழ் பவள்.

அனிச்சப்பூவே, நீ எல்லா மலர்களினும் மென்மையான தன்மையைப் பெற்றிருக்கின்றாய். ஆதலின் நீ வாழ்வாயாக. ஆனால் என்னால் விரும்பப்படுகின்றவள் உன்னைக்காட்டிலும் மென்மையான தன்மையுடையவள்.

10. முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு.

மூங்கில்போலும் தோளினையுடைய இவளுக்கு உடல் தளிர் போன்ற தன்மை வாய்ந்தது. பல் முத்துப்போன்றது. மணம் இயற்கையாக அமைந்த நல்ல மணம். மை தீட்டப்பெற்ற அவள் கண்கள் வேல்போன்று இருக்கும்.

11. அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்.

அனிச்சமலரும் அன்னப் பறவையின் இறகும் ஆகிய இவைகள் இவள் பாதத்திற்கு (முள்ளோடுகூடிய) நெருஞ்சிப் பழம் போன்றவைகள்.

12. பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயிறு ஊறிய நீர்.

மென்மையான மொழிகளைப் பேசுகின்ற இவளுடைய வெண்மையான பற்களில் ஊறிய நீர் பாலோடு தேன் கலந்தாற் போன்ற சுவையை யுடையதாயிருக்கின்றது.

13. உடம்பொடு உயிரிடை என்னமற் றன்ன
மடந்தையொடு எம்மிடை நட்பு.

இம் மங்கையோடு எமக்குள்ள தொடர்பு உடம்பிற்கும், உயிர்க்கும் உள்ள தொடர்புகள் எப்படியோ அப்படியாகும்.

உடம்பும் உயிரும் வேற்றுமையில்லாமல் கலந்திருத்தல் போலவும், இன்ப துன்பங்களைச்சேர்ந்து அனுபவித்தல்போலவும் நாங்கள் இருவரும் வேற்றுமையில்லாமல் இன்ப துன்பங்களைச் சேர்ந்து அனுபவிக்கக்கூடிய அவ்வளவு நெருங்கிய தொடர்பு உடையாராவோம் என்பதாம்.

14. கருமணியில் பாவாய்நீ போதாயாம் வீழும்
திருநுதற்கு இல்லை இடம்.

என் கண்ணின் கருமணியிலுள்ள பாவையே என்னால் விரும்பப்படுகின்ற அழகிய நெற்றியை யுடைய இவள் தங்கி இருப்பதற்கு வேறு இடம் இல்லை ஆகையால் நீ தங்கியிருக்கும் அவ்விடத்தைவிட்டு வெளியே வருவாயாக.

15. செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க்கு உரை.

பிரிந்து போகாமல் இருப்பதானால் அதனை எனக்குச் சொல். பிரிந்து சென்று விரைந்து வருதலைப்பற்றியதாய் இருந்தால் நீ வரும் வரையில் உயிர் வைத்துக்கொண்டு இருப்பாருக்குச் சொல்.

16. வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு
வீழ்வார் அளிக்கும் அளி.

தம்மை விரும்புகின்றவர்கட்குக் காதலர் காட்டும் கருணை உழவுத் தொழிலால் வாழ்கின்றவர்கட்கு மேகம் வேண்டிய மழையைப் பெய்து காப்பாற்றுதல் போன்றதே ஆகும்.

17. நினைப்பவர் போன்று நினையார்கொல் தும்மல்
சினைப்பது போன்று கெடும்.

எனக்குத் தும்மல் வருவது போன்று தோன்றி, வராமல் அடங்குகின்றது; ஆதலால் என் காதலர் என்னை நினைப்பவர் போலிருந்து நினையாமல் இருந்து விடுகின்றாரோ? அப்படித்தான் எனக்குத் தோன்றுகிறது.

18. துஞ்சுங்கால் தோள்மேல ராகி விழிக்குங்கால்
நெஞ்சத்தர் ஆவர் விரைந்து.

தூங்கும்போது என் காதலர் என் தோளின்மேல் இருப்பவராகித் தூங்கி விழிக்கும்போது உடனே விரைந்து என் நெஞ்சில் உள்ளவராகின்றார்,

19. புலப்பேன்கொல் புல்லுவேன் கொல்லோ
கண்அன்ன கேளிர் வரின். [கலப்பேன்கொல்

பிரிந்து சென்ற என் கண் போன்ற காதலர் திரும்பி வருவாரேயானால் நான் அவரிடம் பிணங்கி நிற்பேனோ, கட்டித் தழுவிக்கொள்வேனோ அல்லது இவ்விரண்டினையும் கலந்து செய்வேனோ நான் அறியேன்.

20. மணியில் திகழ்தரு நூல்போல் மடந்தை
அணியில் திகழ்வதொன் றுண்டு.

கோக்கப்பட்ட மணியினுள் இருந்து புறத்தே விளங்கும் நூல்போல இம்மங்கையின் அழகிற்குள்ளாகத் தோன்றும் ஒரு குறிப்பு உண்டு.

21. ஊடற்கண் சென்றேன்மன் தோழி அதுமறந்து
கூடற்கண் சென்றது என் நெஞ்சு.

தோழியே, நான் என் கணவரிடம் பிணங்கி இருத்தல் வேண்டும் என்னும் கருத்தோடு சென்றேன். ஆனால் என் மனம் அதை மறந்து அவரைச் சேருவதற்கே விரைந்து சென்றது.

22. எழுதுங்கால் கோல்காணாக் கண்ணே போல்
பழிகாணேன் கண்டவிடத்து. [கொண்கன்

மை தீட்டப்படும்போது மை தீட்டும் கோலைக் கண் உணராதது போலக் கணவனைக் கண்டபோது அவரைக் காணாதபோது நினைத்திருந்த குற்றங்களுள் ஒன்றையும் நான் காண மாட்டேன்.

23. காணுங்கால் காணேன் தவறாய காணாக்கால்
காணேன் தவறல் லவை.

என் கணவரை யான் காணும்போது குற்றமானவை ஒன்றையும் நான் அறியேன்; அவரைக் காணாதபோது குற்றமல்லாதவற்றை அறியவே மாட்டேன் (அவர் குற்றத்தையே காண்பேன்).

24. மலரினும் மெல்லிது காமம் சிலர் அதன்
செவ்வி தலைப்படு வார்.

காம இன்பம் மலரைக் காட்டிலும் மென்மையுடையதாக இருக்கும். அங்ஙனம் அது மென்மை யுடையதாய் இருத்தலை அறிந்து அதன் நல்ல பயனைப் பெறக்கூடியவர்கள் உலகத்திற் சிலரே ஆவர்.

25. கெட்டார்க்கு நட்டார்இல் என்பதோ நெஞ்சேநீ
பெட்டாங்கு அவர்பின் செலல்.

மனமே, என்னிடம் நில்லாமல் நீ விரும்பியவாறே அவரிடம் செல்லுதற்குக் காரணம் துன்பத்தால் அழிந்தவர்க்கு இவ்வுலகத்தில் நண்பர் இல்லை என்னும் எண்ணமோ?

26. உப்பமைந் தற்றால் புலவி அதுசிறிது
மிக்கற்றால் நீள விடல்.

ஊடல் உணவுவகைகளுக்குச் சுவைதரும் உப்புப் போன்றது. அவ்வூடலை நாம் சிறிது அதிக நேரம் நீட்டித்தோமானால் உப்பு அதிகப்பட்டு உணவு சுவை கெட்டுப்போவது போல் இல்வாழ்வு பயனற்றதாகிவிடும்.

27. இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக்
கண்ணிறை நீர்கொண் டனள்.

இந்தப் பிறவியில் நான் உன்னை விட்டுப் பிரியவே மாட்டேன் என்றேன். அப்படியானால் மறு பிறவியில் பிரியக்கருதுகின்றீரோ என்று பிணங்கித் தன் கண்கள் நிறைய நீரைப் பெருக்கினாள்.

28. உள்ளினேன் என்றேன்மற்று என்மறந்தீர் [என்றென்னைப்
புல்லாள் புலத்தக் கனள்.

பிரிந்திருந்த காலத்து 'நான் உன்னை நினைத்தேன்' என்றேன். அப்படியானால் 'என்னை நீர் மறந்தீரோ, மறந்தாலல்லவோ

162962

நினைத்திருக்க வேண்டும் என்று சொல்லி முன் தழுவுவதற்கு இருந்த அவள் அதைவிட்டு ஊடல் கொள்ளலாயினள்.

29. நினைத்திருந்து நோக்கினும் காயும் அனைத்துநீர்
யாருள்ளி நோக்கினீர் என்று.

சொற்களும் செயல்களும் அவளுக்குப் பிணக்கை உண்டாக்குவதால் அவற்றை ஒழித்து மௌனமாக அவள் உறுப்புக்களின் அழகினையே நோக்கி இன்புற்ற வண்ணம் இருந்தேன். அப்போது அவள் நீர் யாரை மனத்தில் நினைத்து என்னுடன் ஒப்பிட்டுப் பார்க்கின்றீர் என்று என்மீது கோபங்கொண்டாள்.

30. உணவினும் உண்டது அறல்இனிது காமம்
புணர்தலின் ஊடல் இனிது.

நாம் உண்ணும்போது அடையும் இன்பத்தைவிட உண்டவற்றைச் செரித்துக் கொள்ளுதலில் நன்மை மிகுதியும் உண்டு. அதுபோலக் காம இன்பத்தற்குக் காதலியின் தோள்களைச் சேர்தலினும் அவள் ஊடலால் நிகழும் இன்பம் மிகவும் பெரிது.

31. ஊடலில் தோற்றவர் வென்றார், அது மன்னும்
கூடலில் காணப் படும்.

இன்பம் நுகர்தற்குரிய இருவருக்குள் நிகழும் ஊடலில் தோல்வியுற்றவரே வெற்றிபெற்றவராவர். இவ்வுண்மை அப்போது தெரியக்கூடாதிருப்பினும் அவர்கள் சேர்ந்து இன்புறும் போது நேரில் கண்கூடாக அவர்களே அறிந்துகொள்ளுதல் கூடும்.

32. ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்.

காமத்திற்கு இன்பம் தருவது ஊடுதலே ஆகும். அவ்வூடுதல் தீர்ந்தபின் காதலனும் காதலியும் கூடித் தழுவப்பெற்றால் அஃது அக்காதலை நிறைவேற்றும் இன்பம் ஆகும்.

19-1-67. 20/1/68

Jyothi Printers, Madras-1.

மாணவர் மன்ற வெளியீடு : 13

27 - 5 - '56

விலை 4 அணா

தேவன் அச்சகம். சென்னை-1.